மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.

**EA.2/2021 in EP.3/2021**

தேதி: 23.11.2021

பெயர்: சாிதா (PW-1)

**முதல் விசாரணை தொடர்ச்சி:** 23.11.2021

சாட்சி அனுமதியின்போில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறாா்.

ஆட்சேபணை மனுவில் கண்ட மனுச்சொத்தானது எனது வசத்திலும்அனுபவத்திலும் இருப்பதாக எனது வழக்கறிஞா் மூலம் நான் 1ம் எதிா்மனுதாரருக்கு 28.05.2021 அன்று நான் அனுப்பி வழக்கறிஞா் அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ம.சா.ஆ.2 அறிவிப்பை 1ம் எதிா்மனுதாரா் கண்ணன் 31.05.2021 அன்று பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். அது ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரா் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடா்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.